**Deposition of Witness**
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | Case No.**S.C. 15 / 2022** |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution அசா. 2<br>Defense<br>Court |
| Name | சந்தோஷ்குமார் |
| Father's Name | பழனிசாமி |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.07.2024. | |

<u>முதல் விசாரணை</u>

நான் கே.பி.குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் படித்துக்கொண்டிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இருவரும் எங்கள் ஊர்காரர்கள் தான். சாட்சி சரவணன் எனது அண்ணன். 27.09.2020 ம் தேதி ஞாயிற்று கிழமை மாலை 7.00 மணியளவில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த விஸ்வபாரதி, சங்கர், நடராஜ், சக்திவேல் மற்றும் எனது அண்ணன் சரவணன்

ஆகியோர் கே.பி.குளம் பேருந்து நிறுத்தத்தில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த தேசிங்குராஜாவின் மைத்துனர் மணிகண்டன் எங்களை பார்த்து மொறைத்துக்கொண்டு இருந்தார். நாங்கள் அவரை கண்டு கொள்ளவில்லை. அப்போது 1ம் எதிரி ராஜ்குமார் அங்கு வந்தார். அப்போது மணிகண்டன் மேற்படி ராஜ்குமாரிடம் நான் வெளியூர்காரன் அதனால் பேச மாட்டிக்கிறாங்க நீ உள்ளூர்காரதானா இவங்க வாயில உம்ப கொடு என்று சொன்னார். அதற்கு நான் மணிகண்டனிடம் தேவையில்லாமல் பேசாதடா என்று சொன்னேன். அதற்கு மணிகண்டன் தேவிடியா பசங்களா உள்ளூர்காரனா பெரிய ஆளு புண்டையா என்று சொன்னார். பின்னர் ராஜ்குமாரிடம் நீயாவது அவன்ட பேச வேனானு சொல்லுடா என்று சொன்னேன். அதற்கு ராஜ்குமார் புண்டா மகனே அவன்ட பேசுனா நீங்க என்ன குறைஞ்சா போயிடுவிங்க என்று சொல்லி எனது நெஞ்சை பிடித்து தள்ளிவிட்டார். அதனால் தள்ளுமுள்ளானது. எனது அண்ணன் என்னை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார். அனைவரும் அங்கிருந்து கலைந்து விட்டோம். நான் வீட்டிற்கு சென்று எனது வீட்டாரிடம் நடந்ததை கூறினேன். அன்றைய தினம் இரவு 7.30 மணியளவில் ஆஜர் எதிரிகளும் மணிகண்டன் ஆகிய மூவரும் TN 47 AP 7743 என்ற பதிவெண் கொண்ட பல்சர் வண்டியில் எனது வீட்டின் முன்பாக வந்து வண்டியை நிப்பாட்டி விட்டு ராஜ்குமார் தேவிடியா பசங்களா வெளிய வாங்கடா என்று கத்தினார். நானும் எனது அண்ணன் எனது தகப்பனார், எனது அண்ணி, தாயார் ஆகியோர் வெளியே வந்தபோது, ராஜ்குமார் இப்போ பேசுடா என்று சொல்லி எனது அண்ணனை வெட்ட வந்தார். எனது அண்ணன் ஒதுங்கி கொண்டார். நான் ஒதுக்க சென்றபோது இதோட ஒழிஞ்சு போடா என்று சொல்லி ராஜ்குமார் எனது இடது பக்க கழுத்தில் அரிவாளால் வெட்டினார். ராஜ்குமார் வெட்டும்போது விமல்ராஜ் இவனை போட்டால் தான் இந்த ஊருக்குள்ள நாம யாருனு தெரியும் என்று சொன்னார். அப்போது மணிகண்டன் இந்த புண்டா மகன்களை போட்டால் தான் ஊருக்குள்ள நம்ம கிட்ட வச்சிக்ககூடாது என்று பயம் வரும் என்று சொன்னார். அதன் பின்னர் மூவரும் வண்டியை எடுத்துக்கொண்டு ஓடி

விட்டார்கள். அதன் பின்னர் நான் மயக்கம் ஆகிவிட்டேன். கரூர் அமராவதி மருத்துவமனையில் இருந்தபோது தான் எனக்கு மயக்கம் தெளிந்தது. சம்பவம் பற்றி போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் அரிவாளால் தான் ராஜ்குமார் என்னை வெட்டினார். அந்த அரிவாளால் சா.பொ.1.

ஒம்/ K. இன்ப கார்த்திக்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.